96 92
25 MAY 1931 THE TANJORE LIBRARY

ௐ

ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவிராஜகாசார்ய

ஸ்ரீ சங் பகவத் பூஜ்யபாதர் அவர்கள்

பேரில்

அருளிச்செய்த

சர்வ சுருதி ஸ்மிருதி சாரமய

# ஸ்ரீ குருபுஜங்கஸ்தோத்திரம்.

92

தஞ்சைமாநகரம்

ஸ்ரீலஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகள்

இயற்றியருளிய

14542

தமிழ் மொழிபெயர்ப்புடன்

தஞ்சை

கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் சமஸ்கிருத பண்டிதர்

பிரஹ்மஸ்ரீ S. சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களால்

பார்வையிடப்பட்டு

தஞ்சை


ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர முத்திராசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1925.

இதன் விலை] *All Rights Reserved.* [அணா 4.


ௐ 92



ஸ்ரீமத் ஜகத்குரு ஆதிசங்கராசாரிய சுவாமிகள்.

ஓ௦

தத்ஸத்.



தஞ்சை

ஸ்ரீலஸ்ரீ பிரஹ்மாநந்த ஸ்வாமிகள்.

# முகவுரை.

சங்கர பகவத் பாதாச் சாரிய புஜங்கஸ் தோத்திரம்
சங்கை யிலாது யாருந் தமிழினு முணரத் தஞ்சை
எங்குரு பிரஹ்மாநந்த னெழிலுரை செய்தா னித்தை
பங்கமிற் சுகத்தை நாடிப் படிப்பரே லஃதே யாவர்.

நித்தியாநந்தத்திற் பற்றுடையோரனைவரும் அந்தக்கரண சுத்திவாயிலாக விவேக வயிராக்கிய சாதனமுடைய முமுக்ஷுத்துவமடைந்து ஸ்ரீஸத்குரு கிருபையால் சிரவண மநந நிதித்தியாசன முதிர்ச்சியில் எந்த ஸ்வரூபஸ்திதியை அடைகின்றார்களோ வத்தமது ஆத்மஸ்வரூபமாகிய பரப்பிரஹ்மமே ஜீவர்களது பரிபக்குவப் பட்ட கன்மபலபோகத்தின்பொருட்டு மாயாவுபாதியைக்கொண்டு ஜகத்கர்த்தாவாயும், மேற்சொன்ன முமுக்ஷுக்களின்பொருட்டு கருணையங்கடலாகிய அச்சிவமே புலியிதள்முதலிய கோல நீத்து இக்கலியினிற் சேரநாட்டின்கண் காலட்டி யென்னுஞ் க்ஷேத்திரத் திற் மாநுட வுருக்கொண் டவதரித்து, நான்காவ தாச்சிரம மமர்ந்து ஸ்ரீபிரஹ்மசூத்ராதிபாஷியங்களைச்செய்து அதன்பயனுகுந் தன்னை (பிரஹ்மத்தை)யே நற்றவத்தோர் யாவரும் இலகுவினிலுணரு மாறு உபதேசித்தருளிய லோகபூஜ்ய ஸ்ரீ சங்கரபகவத்பாதாச் சாரிய ஸ்வாமிகளது ஸ்ரீ குருபுஜங்கஸ்தோத்திரமாகிய இந்நூற்கு எமது ஸத்குருவாகிய தஞ்சை ஸ்ரீ பிரஹ்மாநந்தஸ்வாமிகள் உலகோபகாரார்த்தமாக தமது பெருங்கருணையாற் இனிய தமிழுரை ஒன்றியற்றியருளினர். இதனை அன்புடன் பாராயணஞ் செய்பவர்களனைவரும் இதிலுபதேசித்தபடி பரிபக்குவப்பட்ட மனத்தினராக தமது நிஜஸ்வரூபமாகிய பிரஹ்மாநந்த சிவஸ்வரூபஸ்திதி (நித்திய பிராப்த்தத்தின் பிராப்தி)யை அடைவார்க ளென்பது திண்ணம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

சு. பாக்கியம் பிள்ளை,

மானேஜிங் டிரஸ்டி.

சங்காவிலாச சாரதா மந்திரம், தஞ்சாவூர்.

உ

ஸ்ரீகணேசாய நம:

ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவிராஜகாசார்ய

ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகள்பேரில்

அருளிச்செய்த

# ஸ்ரீகுருபுஜங்க ஸ்தோத்திரம்.

सदेकं परं केवलं निर्विकारं निराकारमानन्दमात्रं पवित्रम् ।
स्वयंज्योतिरव्यक्तमाकाशकल्पं श्रुतिर्ब्रह्म यत्प्राह तस्मै नमस्ते ॥ १ ॥

சத்தும், ஏகமும், பரமும், கேவலமும், நிர்விகாரமும், நிராகாரமும், ஆநந்தமாத்திரமும், பவித்திரமும், ஸ்வயம்ஜோதியும், அவ்வியக்தமும், ஆகாயத்தைப்போன்றதுமாகிய எந்தப் பிரஹ்மத்தைச் சுருதி கூறுகின்றதோ அந்த உமக்கு நமஸ்காரம். (க)

य एकोऽपि मायावशात्सर्वहेतुः स्वसृष्टेषु विश्वेषु विष्वक्प्रवेशात् ।
श्रुतौ जीव इत्युच्यते केवलात्मा तुरीयाय शुद्धाय तस्मै नमस्ते ॥ २ ॥

எது ஒன்றாயிருந்தும் மாயாவசத்தினால் எல்லாவற்றிற்கும் காரணமாயிருக்கின்றதோ, எந்தக் கேவலாத்மா தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட ஜகத்தில் எல்லாவற்றினும் பிரவேசித்தலினால் சுருதியிற் சீவனென்று சொல்லப்படுகின்றதோ அந்தத் துரியமும் சுத்தமுமாகிய உமக்கு நமஸ்காரம். (உ)

न यस्मादिह द्रष्टृ विज्ञातृ चान्यत्क्वचित्स्यात्परं द्रष्टृ विज्ञातृ वा यत् ।
समस्तासु बुद्धिष्वनुस्यूतमेकं नमो ब्रह्मणे जीवरूपाय तस्मै ॥ ३ ॥

ஈண்டுப் பார்ப்பவனும் அறிபவனும் ஓரிடத்தும் எதனின் வேறாயிருப்பதில்லையோ, அல்லது யாது மேலான காண்பானும் அறிவானுமாயிருக்கின்றதோ, எது எல்லாப் புத்திகளினும் அநு

சூதமாய் ஒன்ருயிருக்கின்றதோ, அந்தச் சிவரூபப் பிரஹ்மமாகிய உமக்கு நமஸ்காரம். (௩)

मुखाद्दर्पणे दृश्यमानो न भिन्नो मुखाभास एवं चिदाभास ईशः ।
चितो नैव भिन्नोऽस्ति मायास्थितो यः परेशाय तस्मै नमः केवलाय ॥ ४ ॥

முகத்தினின்றும் கண்ணாடியிற் காணப்படும் முகாபாஸம் (முகப் போலி) வேறன்று. இவ்வாறே மாயையிலுள்ள சிதாபாஸ ஞகிய ஈசன் எவரோ, அவர் சித்தைவிட வேறல்லர். அப்படிப் பட்ட கேவலம் பரேசஞகிய உமக்கு நமஸ்காரம். (௪)

यथा सूर्य एकः स्थितस्तोयपात्रेष्वनेकेषु यो निर्विकारस्तथात्मा ।
स्थितः स्वीयबुद्धिष्वनेकासु नित्यश्चिदेकस्वरूपाय तस्मै नमस्ते ॥ ५ ॥

எப்படிச் சூரியன் ஒருவனே ஜலபாத்திரங்களநேகங்களிலிரு ந்து நிர்விகாரமாயிருக்கின்ருனே, அவ்வாறு எந்த ஆத்மா தனது புத்தி யநேகங்களிலிருக்கினும், நித்தியமாகவே யிருக்கின்றதோ, அந்தச் சிதேகஸ்வரூபமான உமக்கு நமஸ்காரம். (௫)

स्थितोऽनेकबुद्धिष्वयं जीव एको विभुः कारणैकत्वतो नात्र नाना ।
इति त्यक्तसर्वैषणापीह यस्य प्रसादाद्विजानन्ति तस्मै नमस्ते ॥ ६ ॥

அநேக புத்திகளில் நிற்கின்ற இந்தச் சீவன் ஏகஞகிய விபு வாம், காரணம் ஒன்ருயிருத்தலின்; ஈண்டு நாநா வென்பதில்லை யென்று சகல ஏஷணைகளையும் விட்டவர்கள் எவனுடைய பிரசாத த்திஞல் அறிகின்ருர்களோ, அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம்.

मुखैः पञ्चभिर्भोग्यवस्तूनि भुङ्क्ते ह्यभोक्तापि बुद्धिस्थितो बुद्धितुल्यः ।
करोतीव कर्माण्यकर्मापि यो वै विचित्राय तस्मै नमस्तेऽस्तु नित्यम् ॥ ७ ॥

அபோக்தா வாயிருந்தும் ஐந்து முகங்களாலும் போக்கிய வஸ்துக்களைப் புசிக்கின்ருனே, அகர்மா வாயிருந்தும் புத்தியிலிருப் பவஞய்ப் புத்திசமானஞய்க் கர்மங்களைச் செய்வது போன்றிருக் கின்ருனே, அப்படிப்பட்ட விசித்திர வடிவாயுள்ள உமக்கு நித்தி யம் நமஸ்காரம். (௭)

चिदाभास एवात्र कर्तैव भाति स्वरूपापरिज्ञानतो यस्य नूनम् ।
स्वबुद्धेरियं कर्तृभोक्तृत्वरूपा मृषा संसृतिर्वै नमस्तेऽस्तु तस्मै ॥ ८ ॥

எவனுடைய சொரூபத்தை யறியாததினால் சிதாபாஸனே ஈண்டுக் கர்த்தாவைப் போல காணுகிறானோ, சுவபுத்தியி னின்றும் இக் கர்த்திருத்துவ போக்திருத்துவ ரூப மித்தையான சம்சாரமுண்டாயிருக்கின்றதோ, அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம். (அ)

चिदाभासचैतन्यबुद्धीर्विविच्यात्र विज्ञाय संसारबन्धाद्विमुक्तः ।
य एतद्विवेकावधिं स्वस्य मेने समस्तं च संसारमस्मै नमस्ते ॥ ९ ॥

எது சிதாபாஸசைதன்னியபுத்திகளை ஈண்டு விவேகித்தறிந்து சம்சாரபந்தத்தினின்றும் விடுபட்டிருக்கின்றதோ, எது சகல சம்சாரத்தையும் தனது இவ்விவேகம் வரையில் நிச்சயிக்கின்றதோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (௯)

न कस्यापि संसारलेशोऽस्ति कश्चित्स कर्तृत्वभोक्तृत्वरूपो हि मिथ्या ।
समस्तोऽप्ययं यत्स्वरूपाविवेकान्नमस्ते सदा नित्यमुक्ताय तस्मै ॥ १० ॥

சம்ஸாரலேசமெதுவும் எவனுக்கு இல்லையோ அந்தக் கர்த்திருத்துவ போக்திருத்துவ ரூபம் மித்தையாம், எந்தச் சொரூபத்தை யறியாததினால் இந்தச் சகல ஜகத்துமிருக்கின்றதோ, அந்த என்றும் நித்தியமுக்தமாயுள்ள உமக்கு நமஸ்காரம். (௰)

जडा बुद्धिरात्मा परो निर्विकारश्चिदाभास एकोऽपि मिथ्यैव जीवः ।
य एतद्विवेकी स्वतो नित्यमुक्तः सदा निर्विकाराय तस्मै नमस्ते ॥ ११ ॥

புத்தி ஜடம், ஆத்மா அதற்கந்நியமானது (சித்து); நிர்விகாரம். சிதாபாஸனொருவனாயினும் மித்தையாகிய ஜீவனே. இதனை விவேகிப்பவன் எவனோ அவன் இயல்பாகவே நித்திய முக்தனாகின்றான். ஆதலால் அத்தன்மைய என்றும் நிர்விகாரமாயுள்ள உமக்கு நமஸ்காரம். (௰௧)

चिदाभास एकोऽव्ययः कारणस्थो य ईशः स एवेह कार्यस्थितः सन् ।
अभूज्जीवसंज्ञः स एको हि जीवः स भिन्नो न यस्मान्नमस्तेऽस्तु तस्मै ॥ १२ ॥

சிதாபாசன் ஏகனாகிய அவ்வியயனாவான் காரணத்தின்கண்ணுள்ள ஈசனெனவனே, அவனே ஈண்டுக் காரியத்தின்கண்ணுள்ளவனாய் ஜீவப்பேருடையவனானான் அந்த ஜீவன் ஒருவனே. அவன் எதனின் வேறல்லனோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (௧௨)

यदज्ञानतो जीवनानात्वमाहुर्महामायया मोहिता वाददक्षाः ।
विवेकी वदत्येकमेवात्र जीवं परित्यक्तवादो नमस्तेऽस्तु तस्मै ॥ १३ ॥

மகாமாயையினால் மோகிக்கப்பட்டவர்களான வாத சாமர்த்தியமுடையவர்கள் எதனை அறியாததினால் ஜீவநாநாத்துவம் சொல்லுகின்றார்களோ, வாதத்தைவிட்ட விவேகி ஜீவனை ஈண்டேக மென்றே கூறுவனோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (௧௩)

चिदाभास एकोऽथवा नेति सर्वे विमुह्यन्ति वेदान्तिनोऽप्यन्यभक्ताः ।
तथाप्येक एवेति धीदार्ढ्यदाता य आत्मा स्वभक्तस्य तस्मै नमस्ते ॥१४॥

சிதாபாசன் ஒருவனே அங்ஙனமிருக்க எல்லோரும் வேதாந்திகளாயிருந்தும் அந்நியபக்தியினால் நாநாவென்று மயங்குகின்றனர். அங்ஙனமாயினும் தன் பக்தர்களுக்கு ஆத்மா ஒன்றேயென்னும் புத்தியின் திடத்தன்மையைக் கொடுப்பவர் எவரோ அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (௧௪)

मुखादर्शयोरैक्य एवैकतायां मुखाभास एवं चिदाभास एकः ।
स्वचिद्ब्रह्मबिम्बैक्यमायैक्यतोऽयं यदंशोऽखिलेशो नमस्तेऽस्तु तस्मै ॥१५॥

முகம் கண்ணாடிகளுள் ஒன்றொன்றுள காலத்து முகாபாஸம் ஒன்றேயாம் இவ்வாறே தனது சித்தாகிய பிரஹ்ம பிம்பமும் மாயையு மொவ்வொன்றாகவே யிருத்தலால் எதன் அம்சமாகிய இவ்வகிலேசனான சிதாபாசன் ஒருவனே யாகின்றானோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (௧௫)

श्रुतिर्ह्येकतां ब्रह्मणो वक्ति नूनं सजातीयभेदादिशून्यं ततोऽत्र ।
स्वमायैकतास्य युक्त्यापि सिद्धा नमस्ते सदैकस्वरूपाय तस्मै ॥ १६ ॥

சுருதியானது பிரஹ்மத்திற்கு நிச்சயமாக சஜாதீயபேதாதி சூனிய ஏகத்துவம் கூறுகின்றது. ஆதலால் ஈண்டுத் தனது மாயையின் ஏகத்துவம் இவனுக்கு யுக்தியினாலும் சித்தித்தது. அந்த என்றும் ஏக சொரூபமாயுள்ள உமக்கு நமஸ்காரம். (௰௬)

न मायाबहुत्वं तदा तत्प्रतिष्ठा अनेकेश्वराः संभवेयुर्हि नैतत् ।
क्वचिद्युज्यते यस्य मायाप्यनेका नमस्ते जगद्धेतुभूताय तस्मै ॥ १७ ॥

மாயை அநேக மெனவில்லை (மாயை அநேக மெனின்) அப்போது அதில் நிலைத்தவர்களான அநேக ஈசுவரர்கள் சம்பவிப்பர். இது ஓரிடத்தும் பொருந்தாது. ஆதலால் எவருடைய மாயையும் அநேகமாதல் பொருந்துவதில்லையோ, அந்த ஜகத்காரண வடிவமாகிய உமக்கு நமஸ்காரம். (௰௭)

न मायां विना यस्य कर्तृत्वमस्ति प्रवेशोऽपि तस्मात्समस्तं मृषैव ।
माहामायिने निर्विकाराय तस्मै नमो ब्रह्मरूपाय शुद्धाय तुभ्यम् ॥ १८ ॥

மாயையின்றி எதற்குக் கர்த்திருத்துவமும் பிரவேசமுமில்லாமையினால் சகலமும் பொய்யாகவே யிருக்கின்றனவோ, அந்த மகாமாயியும், நிர்விகாரமும், பிரஹ்மரூபமும், சுத்தமுமாகிய உமக்கு நமஸ்காரம். (௰௮)

य आत्मा दृगेवाऽऽस दृश्यं त्वनात्मा विवेकाद्द्वयोरात्मदृष्टिः सदृश्ये ।
विनष्टो भवेत्सा दृशि स्वस्वरूपे नमस्ते दृगात्मस्वरूपाय तस्मै ॥ १९ ॥

யாதொரு ஆத்மா திருக்கேயா யிருந்தது. திருசியமோ அநாத்மாவாம். இரண்டன் விவேகத்தால் ஆத்மதிருஷ்டியுண்டாம். அது திருசியத்தோடுகூடிய திருக்காகிய தனது ஸ்வரூபத்தில் முற்றும் நஷ்டமாகும். அப்படிப்பட்ட திருகாத்மஸ்வரூபமாகிய அந்த உமக்கு நமஸ்காரம். (௰௯)

स दृग्निर्विकारः स्वमाया जडेयं दृगाभास एको मृषैवेति यस्य ।
जगत्कर्तृता तात्त्विकी नास्ति तस्मै नमः केवलाकर्तृरूपाय तुभ्यम् ॥२०॥

அந்தத் திருக்கு நிர்விகாரம்; இத் தனது மாயை ஜடம்; திருகாபாஸன் (திருக்குப் போலி) ஒன்றாய்ப் பொய்யேயாமென்று எவ

ருக்கு ஜகத்கர்த்திருத்துவம் உண்மையுடையதன்றோ, அந்தக்கேவலம் அகர்த்திருவடிவராகிய உமக்கு நமஸ்காரம். (௨௰)

**अमाययैव मायी विभुः शुद्ध आत्मा सृजत्यत्त्यवत्येतदानन्दपूरः ।**
**न मायां विना स्रष्टृता साक्षिता वा विशुद्धात्मनो यस्य तस्मै नमस्ते॥२१॥**

இந்த ஆநந்தபூர்ணனாகிய விசுத்தாத்மா மாயையில்லாதவராயிருந்தும் மாயிபைப்போல ஆக்கியளித்துக் கெடுக்கின்றார். எந்த விசுத்த ஆத்மாவிற்கு மாயையின்றிச் சாக்ஷித்துவமும் படைக்குந்தன்மையு மில்லையோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (௨௧)

**चिताभास एवाखिलोपाधिनिष्ठः समस्तैकसाक्षी स जीवेशसंज्ञः ।**
**चिदंशोऽखिलात्मा न भिन्नोऽस्ति यस्मान्नमस्ते विशुद्धात्मरूपाय तस्मै॥२२॥**

எல்லாவுபாதிகளிலு மிருக்கும் சிதாபாஸனே சகலத்திற்குமேக சாட்சியாம். அவன் ஜீவன் ஈசன் என்னும் பெயருடையவன். சித்தினம்சமாகிய சர்வாத்மா எதனின் வேறன்றோ, அந்த விசுத்தாத்ம வடிவாகிய உமக்கு நமஸ்காரம். (௨௨)

**अहं सच्चिदानन्द आत्मैव शुद्धो विमुक्तोऽस्मि वेदान्तवाक्यार्थबोधात् ।**
**इति स्वस्वरूपं विजानाति विद्वान्परं यत्परेभ्योऽपि तस्मै नमस्ते ॥ २३ ॥**

வேதாந்த வாக்கியார்த்த ஞானத்தினால் யான் சச்சிதாநந்தமாகிய ஆத்மாவே; சுத்தனும் விமுத்தனுமாயிருக்கின்றேன் என்று எந்த மேலானவற்றிற்கெல்லாம் மேலாயிருக்கின்ற சுவசொரூபத்தை வித்வானறிகின்றானோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம்.()

**स्वमायापरिभ्रान्तचित्ता अजस्रं पराग्वस्तु पश्यन्ति न प्रत्यगर्थम् ।**
**मुमुक्षुस्तु यं पश्यति प्रत्यगर्थं परब्रह्मरूपाय तस्मै नमस्ते ॥ २४ ॥**

தமது மாயையினால் மயங்கிய சித்தமுடையவர்கள் இடைவிடாது பராக்கான (புறம்பான) பொருளைக்காண்கின்றார்கள்; பிரத்தியக்குப்பொருளைப் பார்ப்பதில்லை. முமுக்ஷு எந்தப் பிரத்தியகர்த்தத்தைக் காண்கின்றானோ, அந்தப் பரப்பிரஹ்ம வடிவமாகிய உமக்கு நமஸ்காரம். (௨௪)

उपास्योऽन्य ईशोऽस्त्यहं त्वन्य इशात्पशुर्वेद नैनं भजत्यत्र योऽस्मात् ।
विवेकी स एवाहमस्मीत्युपास्ते यमात्मानमीशं नमस्तेऽस्तु तस्मै ॥ २५ ॥

உபாசிக்கப்படுபவனாகிய ஈசன் வேறு ஈசுவரனினும் யான் வேறெனப் பசுவானவ னறிகின்றான். இதினின்றும் விவேகித்தவனாய் எவன் ஈண்டு இவ்வாறு பஜிக்காது, எந்த ஆன்மாவாகிய ஈசனை அதுவே யானெனன் றுபாசிக்கின்றானோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (உரு)

भयं भेददृष्टेर्भवत्युल्बणं वै महान्तो न भेदं प्रपश्यन्ति तस्मात् ।
यदज्ञानतो दृश्यते भेद एवं भिदामोहहन्त्रे नमस्तेऽस्तु तस्मै ॥ २६ ॥

பேததிருஷ்டியினால் மிகுதியாகப் பயமுண்டாகின்றது. அதனால் மகாத்மாக்கள் பேதத்தைக் காண்கிறதில்லை. எதனை யறியாததினால் இவ்வாறு பேதந் தோற்றுகின்றதோ, அப்படிப்பட்ட பேத மோகங்களைக் கெடுப்பவரான உமக்கு நமஸ்காரம். (உசு)

विरिञ्चेन्द्रसूर्याग्निरुद्रेन्दुविष्णून्प्रकल्प्यैक एवाद्वयः सर्वसाक्षी ।
जगच्चक्रविभ्रान्तिकर्ता य आत्मा न दृश्येत केनापि तस्मै नमस्ते ॥ २७ ॥

பிரஹ்மா இந்திரன் அக்கினி உருத்திரன் இந்து விஷ்ணுவென்னுமிவரைக் கற்பித்து, ஒன்றேயாய், அத்துவித சர்வசாக்ஷியாய் ஜகச்சக்கரத்தைச் சுழற்றும் கர்த்தாவாயுள்ள எந்த ஆத்மா எவனாலும் காணப்படுகிறதில்லையோ அத்தன்மைய உமக்கு நமஸ்காரம்.

जगज्जाग्रति स्थूलमेतत्समानं मनोवासितं स्वप्न आनन्दनिद्राम् ।
सुषुप्तौ स्वमेवाभिपश्यन्मुदास्ते तुरीयो य आत्मा नमस्तेऽस्तु तस्मै ॥ २८ ॥

ஜாக்கிரத்தில் தூலஜகத்தையும், சொப்பனத்தில் மனோவாசனையினாலாக்கப்பட்ட இதற்குச் சமான ஜகத்தையும், சுழுத்தியில் ஆநந்த நித்திரையையும் தானே பார்த்து, எந்த ஆத்மா ஆநந்தமாயிருக்கின்றதோ, அந்தத் துரியமாகிய உமக்கு நமஸ்காரம். (உஅ)

समस्तादपि स्थूलसूक्ष्माच्छरीरात्परः कारणाच्चान्य आत्मा समीपे ।
य एको विदूरेऽपि तिष्ठन् जनानां महिम्नि स्वकीये च तस्मै नमस्ते ॥ २९ ॥

சகல ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களினும் வேறானதும், காரணத்தினும் வேறானதும், ஏகமுமான எந்த ஆத்மா ஜீவர்களுக்குத் தூரமாகவும் சமீபமாகவும் நின்றும் தனது மகிமையிலிருக்கின்றதோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (உகூ)

यमाश्रित्य नास्तीति चास्तीति वेदे प्रवृत्तो विरुद्धोऽपि वादोऽखिलात्मा ।
नमस्तेऽङ्घ्रिपाण्यादिहीनाय नित्यं समस्ताङ्घ्रिपाण्यादियुक्ताय तस्मै ॥ ३० ॥

எதனை யாசிரயித்துச் சர்வாத்மா இல்லை இருக்கின்றதென்பதாக வேதத்தில் விருத்தமாகிய வாதம் பிரவிருத்தித்துளதோ, அத்தன்மைய பாதம் பாணி முதலிய வில்லாதவரும் நித்தியம் சகல பாதம் பாணிமுதலியவற்றோடு கூடியவருமாகிய உமக்கு நமஸ்காரம்.

योऽणोरणीयांसमात्मानमेकं महान्तं महद्भ्यस्तुनश्चेतनेभ्यः ।
परं चेतनं नित्यतो वेद नित्यं यमेवेह विद्वान्नमस्तेऽस्तु तस्मै ॥ ३१ ॥

அணுவினும் அணுவானதும், மகத்துவஸ்துக்களினும் மகத்தானதும், சேதனங்களினும் மேலான சேதனமும், நித்தியங்களினும் நித்தியமானதும், ஏகமுமாகிய எந்த சமவான்மாவை வித்துவான் இங்கு அறிகின்றானோ அத்தன்மைய உமக்கு நமஸ்காரம்.()

यदानन्दलेशोपभोगेन सर्वे सदानन्दिनः संभवन्त्यत्र तस्मै ।
सदानन्दसंदोहपूर्णार्णवाय प्रसन्नाय तुभ्यं नमः केवलाय ॥ ३२ ॥

எதன் ஆநந்தலேசத்தை யநுபவித்தலால் ஈண்டு எல்லோரும் எப்போது மாநந்தமுடையவர்களாகின்றார்களோ அந்தக் கேவலம் சதாநந்த சமூகத்தா னிறைந்த சமுத்திரமும் பிரசன்னமுமாகிய உமக்கு நமஸ்காரம். (௩௨)

यमुत्सृज्य मर्त्या भजन्त्यन्यदेवान्न तेषां विमुक्तिः फलं किंतु तुच्छम् ।
श्वपुच्छं गृहीत्वा तरिष्यन्तिके वा समुद्रं ह्यपारं नमस्तेऽस्तु तस्मै ॥ ३३ ॥

எதனை விட்டு மனிதர்கள் அந்யதேவதைகளைப் பஜிக்கின்றார்களோ, அவர்களுக்கு முக்தியில்லை. ஆனால் பயன் துச்சமாம். நாய் வாலைப்பற்றி அபார சமுத்திரத்தைக் கடப்பவர் யாவர்? ஆதலால் அத்தன்மைய (தெய்வமாகிய) உமக்கு நமஸ்காரம். (௩௩)

यथा विद्युदुपास्तौ फलं दास्यतीशस्तथा विष्णुरुद्रेन्द्रवह्न्याद्युपास्तौ ।
फलं दास्यति ब्रह्म यद्वीशसंज्ञः स्वकर्मानुसारं नमस्तेऽस्तु तस्मै ॥ ३४ ॥

எந்த ஈசனென்னும் பெயருடைய பிரஹ்மம் பிரஹ்மாவினுபாசனையில் கர்மாநுசாரமாகப் பலத்தைத் தருவதுபோல விஷ்ணு உருத்திரன் இந்திரன் அக்கினி முதலியோர் உபாஸ்தியிலும் பலத்தைத் தருகின்றதோ அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (௩௪)

न यद्ब्रह्म मोक्षप्रदं स्यात्कादाचिद्विनेहैव मुक्तिप्रदं ज्ञानमेकम् ।
न मोक्ष कृतः कर्मणातः कृतेन प्रपन्नार्तिहन्त्रे नमस्तेऽस्तु तस्मै ॥ ३५ ॥

செய்யப்படுங் கர்மத்தால் மோக்ஷம் ஆக்கப்படுவதன்று. ஆதலால் எந்தப் பிரஹ்மம் ஈண்டே முக்தியைத்தருமோ ஞானமொன்றை விட்டு என்றும் மோக்ஷத்தைத் தருவதாகாதோ, அந்த அடைந்தவர் துன்பத்தை யொழிப்பவரான உமக்கு நமஸ்காரம். (௩௫)

इदं नेतिनेतीत्यमूर्तं च मूर्तं निरस्यैव सर्वं जगद्दृश्यमेतत् ।
निषेधावधि ब्रह्म यच्छिष्यते वै मनोवागतीताय तस्मै नमस्ते ॥ ३६ ॥

இந்தச் சகல திருசிய ஜகத்தையும் இங்ஙனமன்று இங்ஙனமன்றென அமூர்த்தத்தையும் மூர்த்தத்தையும் ஒழித்து, அங்ஙனம் நீக்கிய வெல்லையில் மிஞ்சுவது எதுவோ, அந்த மனோவாக்குக் கெட்டாத உமக்கு நமஸ்காரம். (௩௯)

परित्यज्य यत्तत्त्वसम्यग्विचारं प्रवर्तेत यस्तीर्थयात्राजपादौ ।
करस्थान्नमुत्सृज्य लेढीति हस्तं न यस्योदयस्तस्य तस्मै नमस्ते ॥ ३७ ॥

தத்துவத்தின் செவ்வையான விசாரத்தைவிட்டுத் தீர்த்தயாத்திரை ஜப முதலியவற்றிற் பிரவிருத்திப்பவனெவனோ, அவன் கையிலுள்ள அன்னத்தை எறிந்துவிட்டுக் கையை நக்குகின்றவனாவன்.

அத்தன்மையனுக்கு எதன் உதய முண்டாகிற தில்லையோ அந்த உமக்கு நமஸ்காரம். (௩௭)

न चेत्प्राणवर्गेष्वयं स्याज्जडत्वात्कथं प्राणनाडी क्रियाकारितैषाम् ।
अतो यस्य सिद्धा स्थिता युक्तितोऽपि प्रपञ्चप्रकाशाच्च तस्मै नमस्ते ॥३८॥

பிராண வர்க்கங்களில் இது (ஆன்மா) இராதாயின் ஜடமாதலால் பிராணநாடி எங்ஙன மிவற்றின் கிரியையைச் செய்வதாகும்? இதனால் எதன் இருப்பு யுக்தியினாலும் பெறப்பட்ட தாயிற்றோ பிரபஞ்சத்தைப் பிரகாசித்தலால் அத்தன்மைய உமக்கு நமஸ்காரம்.

भयं यद्विदां नास्ति मृत्युश्च नूनं बिभेत्येव वाय्वादि सर्वं च यस्मात् ।
शरीरेऽहमित्यत्र बुद्धेर्भयं स्यान्नमस्तेऽभयायाशरीराय तस्मै ॥ ३९ ॥

சரீரத்தில் யானென்னும் புத்தியினால் இங்கே பயமுண்டாகின்றது. எதனை யறிந்தவர்களுக்குப் பயமில்லையோ, எதனின்றும் மிருத்தியு வாயு முதலியோர் யாவரும் அஞ்சுகின்றனரோ, அந்த அபயமும் அசரீரியுமாகிய உமக்கு நமஸ்காரம். (௩௯)

गुरौ भक्तियुक्तैरिहैवेश्वरो यः सुविज्ञेय आत्माऽन्यथा त्वब्दकोटया ।
अविज्ञेय एकः स्वबुद्धिस्थितोऽपि प्रियायाखिलेभ्योऽपि तस्मै नमस्ते ॥४०॥

எந்த ஈசுவரனாகிய ஆத்மா குருவினிடத்துப் பக்தியுள்ளவர்களால் ஈண்டே யறியப் படுபவனாவனோ, அங்ஙனம் (குருபக்தி) இல்லாதவர்களுக்கு ஏகனாய்த் தமது புத்தியிலிருப்பவனாயினும், ஆண்டுகள் கோடியானும் அறியப்படுபவனாகானோ, அந்த எல்லாவற்றினும் பிரியமாகிய உமக்கு நமஸ்காரம். (௪௦)

समस्तात्प्रियो देह एवाक्षमस्मात्प्रियं प्राण एवाक्षतोऽपि प्रियोऽतः ।
प्रियः प्रत्यगात्मैव भोक्ता परो यः स्वतोऽतिप्रियायेह तस्मै नमस्ते ॥ ४१ ॥

எல்லாவற்றினும் பிரியமானது தேகமே. இதைவிட இந்திரியம் பிரியம். இந்திரியத்தினும் பிராணன் பிரியம். இதனினும் எந்தப் பிரத்தியகாத்மாவான போக்தாவாகிய பரனே பிரியனோ, அந்தத் தானாகவே இங்கு அதிகப்பிரியனாயுள்ள உமக்கு நமஸ்காரம். ()

प्रियादात्मनोऽन्यन्न विद्येत किंचित्क्वचित्कारणान्नैव भिद्येत कार्यम् ।
य आत्मा समस्तस्य हेतुर्नमस्ते निदानाय सर्वस्य दृश्यस्य तस्मै ॥ ४२ ॥

*பிரியமாகிய ஆத்மாவினும் அந்நியம் சிறிதுமில்லை. ஓரிடத்தும் காரணத்தைவிடக் காரியம்பேதிக்கிறதில்லை. எந்த ஆத்மா எல்லாவற்றிற்கும் ஏதுவாயிருக்கின்றதோ, அந்தச் சகல திருசியங்களுக்கும் காரணமாகிய உமக்கு நமஸ்காரம். (சஉ)*

समस्तं जगत्कारणान्नैव भिन्नं समस्तात्मनः केवलादद्वितीयात् ।
परब्रह्मणोऽव्याकृतेशाच्च यस्मान्नमस्ते क्षरायाक्षरायापि तस्मै ॥ ४३ ॥

*சகல ஜகத்தும் எந்தச் சகலாத்மாவும் கேவலமும் அத்துவிதீயமும் பரப்பிரஹ்மமும் காரணமுமாகிய அவ்வியாகிருத ஈசனைவிட வேறில்லையோ, அந்த க்ஷரமும் அக்ஷரமுமாகிய உமக்கு நமஸ்காரம். (சங)*

यतः कारणान्नेह कार्यं विभिन्नं ततो ब्रह्मणो नैव भिन्नं जगत्स्यात् ।
समस्तं जगद्ब्रह्म तच्चास्मि विद्वानुपास्ते यमेकं नमस्तेऽस्तु तस्मै ॥ ४४ ॥

*எதனால் காரணத்தினைவிட ஈண்டுக் காரியம் வேறன்றோ, அதனால் பிரமத்திற்குவேறாக ஜகத்தில்லை. சகலஜகத்தும் பிரஹ்மமாம். அது யான் என்று ஏகமாகி எதனை வித்துவான் உபாசிக்கின்றானோ அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (சச)*

यथा मृद्विकारो मृतो नैव भिन्नस्तथा चिद्विकारश्चितो नैव भिन्नः ।
अतः सर्वमेतच्चिदेवेति विद्वान्विजानाति यद्ब्रह्म तस्मै नमस्ते ॥ ४५ ॥

*மண்ணின் விகாரம் (காரியம்) மண்ணைவிட வேறன்று, அங்ஙனமே சித்தின் விகாரம் (ஜகத்து) சித்தை விட வேறன்று. ஆதலால் இவ்வெல்லாம் சித்தேயாம் என்று எந்த பிரஹ்மத்தை வித்துவான் அறிகின்றானோ அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (சரு)*

जगद्यस्य सर्वं शरीरं जगन्न प्रमातृप्रमाणप्रमेयात्मको यः ।
समस्तान्तरायाखिलेशाय तस्मै नमः सच्चिदानन्दरूपाय तुभ्यम् ॥ ४६ ॥

எவருக்குச் சகல ஜகத்தும் சரீரமோ, எவர் பிரமாத்திரு பிரமாணப் பிரமேய வடிவமான ஜகத்தன்றே, அந்த சர்வாந்தரமும் அகிலேசனும் சச்சிதாநந்த வடிவமுமாகிய உமக்கு நமஸ்காரம். (சசு)

विदुर्यं न सर्वेऽपि यो वेत्ति सर्वं समस्तेषु भूतेषु तिष्ठन्स्वयं यः ।
समस्तान्तरः प्रेरयत्येव सर्वान्नमस्ते समस्तान्तरेशाय तस्मै ॥ ४७ ॥

எதனை எல்லாம் அறிகிறதில்லையோ, எது சகல பூதங்களினுமிருந்துகொண்டு எல்லாவற்றையும் தானே அறிகின்றதோ, எது எல்லாவற்றினுள் ளிருப்பதாய் எல்லாவற்றையும் பிரேரிக்கின்றதோ, அந்த சர்வாந்தர ஈசனாகிய உமக்கு நமஸ்காரம். (சஎ)

न देहेन्द्रियप्राणधीभूतबृन्दं न संसार्यहं किंतु चिन्मात्रमेकम् ।
परं चापरं ब्रह्मविद्वान्विशुद्ध तदस्तीति यद्वेद तस्मै नमस्ते ॥ ४८ ॥

யான் தேகேந்திரியப் பிராண புத்தி பூதக்கூட்டங்க ளல்லன்; சம்சாரி யல்லன் ஏகனாகிய சின்மாத்திரன் யான். பரமும் அபரமும் சுத்தமுமாகிய பிரஹ்மம் அஃதென எதனை வித்துவான் அறிகின்றானோ அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (சஅ)

यथा स्वप्नदृष्टा च हस्त्यादि मिथ्या तथा सर्वमेतज्जगद्भाति मिथ्या ।
अधिष्ठानमात्रं जगद्दृष्टृ सत्यं विशुद्धं च यद्ब्रह्म तस्मै नमस्ते ॥ ४९ ॥

எங்ஙனம் சொப்பனத்திற் காணப்படுகின்ற யானை முதலியன மித்தையோ, அங்ஙனமே இவ்வெல்லா ஜகத்தும் மித்தையாக விளங்குகின்றது. அதிஷ்டான மாத்திர ஜகத்திருஷ்டவாய் சத்தியமாய் விசுத்தமாயுள்ள பிரஹ்மம் எதுவோ, அவ்வுமக்கு நமஸ்காரம். (சகூ)

परा चापरा यस्य माया द्विधेयं जगत्कर्तृतामक्रियस्यातनोति ।
स्वतो द्रष्टृदृश्यातिरिक्ताय तस्मै नमः केवलायाव्ययायात्मनेऽस्तु ॥ ५० ॥

எவருடைய மாயை பரம் அபரமென இருவகையாய் அக்கிரியனுக்கு இந்தச் ஜக கர்த்திருத்தன்மையை விரிக்கின்றதோ அந்த இயல்பாக காண்பான் காணப்படு பொருள்களுக் கப்பாற்பட்டதும் கேவலமும் அவ்வியயமுமான ஆத்மாவாகிய உமக்கு நமஸ்காரம். ()

विशुद्धात्मतत्त्वापरिज्ञानमूलं विशेषावभासं सुखित्वादिरूपम् ।
विशुद्धात्मतत्त्वे परिज्ञात एतत्कचिन्नास्ति यस्मिन्नमस्तेऽस्तु तस्मै ॥ ५१ ॥

சுகமுடைமை முதலிய வடிவினதாகிய விசேஷத்தோற்றம் விசுத்தமான ஆத்ம தத்துவத்தி னறியாமையைக் காரணமாகவுடையதாம். விசுத்த ஆத்ம தத்துவத்தை யுணர்ந்த காலத்து ஈ தோரிடத்தும் எதன் கணில்லையோ அவ்வுமக்கு நமஸ்காரம். (ருக)

नहि स्रक्परिज्ञानतः सर्पभानं कचिद्विद्यते सर्पता कल्पिता स्यात् ।
तथा कल्पितं सर्वमेतच्च यस्मिन्नमस्ते समस्तावभासाय तस्मै ॥ ५२ ॥

பழுதையையறிதலால் பாம்பின் தோற்றம் ஓரிடத்துமிருப்பதில்லை பாம் பெனல் இத(பழுதையி)னிடத்துக் கற்பிக்கப்பட்டதாம். அங்ஙனமே எதனிடத்து இவ்வெல்லாம் கற்பிக்கப்பட்டதாகின்றதோ, அந்த எல்லாவற்றையும் விளக்குகிறவராகிய உமக்கு நமஸ்காரம். (ருஉ)

सुषुप्तौ न संसारलेशोऽस्ति कश्चित्प्रबोधेऽखिलाहंकृतौ दृश्यतेऽयम् ।
अतोऽहंकृतेरेव संसार इत्थं न वै संसृतिर्यस्य तस्मै नमस्ते ॥ ५३ ॥

சுழுத்தியில் சம்சாரம் அற்பமுமில்லை. விழித்தபோது சர்வாகங்காரத்தில் இது (சம்சாரம்) தோற்றுகின்றது. ஆதலால் அகங்காரத்திற்கே சம்சாரமாம். இவ்வாறு சம்சாரம் எவருக் கில்லையோ அத்தன்மைய வுமக்கு நமஸ்காரம். (ருங)

न शास्ता न शिष्यो न शास्त्रं न विश्वं न शाक्तं च शैवं मतं वैष्णवं वा ।
सुषुप्तौ तदानीं यदस्त्यात्ममात्रं स्वतो निष्प्रपञ्चाय तस्मै नमस्ते ॥ ५४ ॥

சுழுத்தியில் எவுவோனுமில்லை; சீடனுமில்லை; சாஸ்திரமுமில்லை; ஜகத்துமில்லை; சாக்தமுமில்லை; சைவமதமுமில்லை; வைஷ்ணவமுமில்லை. அக்காலத்து எந்த ஆத்மாமாத்திரமிருக்கின்றதோ, அந்த இயல்பாகவே நிஷ்பிரபஞ்சமாயுள்ள உமக்கு நமஸ்காரம். ()

जडानां प्रवृत्तिः स्वतो नास्ति यस्माद्विभोश्चेतनात्मा प्रवृत्तिः प्रवृत्ता ।
मनःप्राणदेहेन्द्रियव्याकृतानां नमस्ते चिदात्मस्वरूपाय तस्मै ॥ ५५ ॥

மனப்பிராணதேகேந்திரிய வியாகிருதங்களாகிய ஜடங்களுக்கு இயல்பாகப் பிரவிருத்தியில்லை. எந்த விபுவாகிய சேதனத்தால் அந்தப் பிரவிருத்தி நிகழ்கின்றதோ, அந்த ஞானாத்ம சொரூபமாகிய உமக்கு நமஸ்காரம். (௫௫)

मनःप्राणदेहेन्द्रियव्याकृतानि स्वतः काष्ठतुल्यानि यत्सन्निधानात् ।
स्वयं चेतनानीव भान्त्येव मोहाज्जडेभ्यः परस्मै नमस्तेऽस्तु तस्मै ॥ ५६ ॥

இயல்பாகக் கட்டைபோன்றிருப்பனவாகிய மனப்பிராணதேகேந்திரிய வியாகிருதங்கள் எதன் சந்நிதானத்தில் மோகத்தினால் தாமே சேதனங்கள் போலத்தோற்றுகின்றனவோ அத்தன்மைய ஜடங்களின் மேலாகிய உமக்கு நமஸ்காரம். (௫௬)

बहिर्बुध्यते प्राणिबुद्धिः पदार्थान्न यं बुध्यते प्राणनाथं स्वसंस्थम् ।
समस्तान्तरात्मानमेकं च तस्मै नमस्ते विरिञ्चादिधीबोधयित्रे ॥ ५७ ॥

பிராணிகளின் புத்தி புறப்பொருள்களை யறிவதாய், எந்த ஏகமும் சர்வாந்தராத்மாவும் தன்னிற் செவ்வே நிலைத்துள்ளதுமான பிராணநாதனை அறியாதோ, அத்தன்மைய பிரஹ்மா முதலியோர் புத்தியை விழிப்பிக்கும் உமக்கு நமஸ்காரம். (௫௭)

परं यत्स्वरूपं विदुर्नापि देवाः कुतोऽन्ये मनुष्यादयो बाह्यचित्ताः ।
तदेवाहमस्मीति भक्तास्त्वजस्रं भजन्त्यद्वितीयं नमस्तेऽस्तु तस्मै ॥ ५८ ॥

எந்தப் பரசொரூபத்தைத் தேவர்களும் அறியார்களோ, அதனைப் புறத்திற் செல்லும் சித்தமுடையோராகிய மற்றை மனிதர் முதலியோர் எங்ஙனம் அறியவல்லார்? எந்த அத்துவிதீயத்தை அதுவே யானென்று பக்தர்களிடைவிடாது பஜிக்கின்றனரோ, அத்தன்மைய வுமக்கு நமஸ்காரம். (௫௮)

समस्तेषु देहेषु सूर्येऽपि तिष्ठन्य एकोऽखिलात्मा समस्तैकसाक्षी ।
स एवाहमस्मीति वेदान्तविद्भिः सदोपास्यतत्त्वाय तस्मै नमस्ते ॥ ५९ ॥

சகல தேகங்களிலும் சூரியனிலுமிருந்தும் எது ஏகமும் சர்வாத்மாவும் சகலத்திற்கும் ஏக சாக்ஷியுமாய், இருக்கின்றதோ

அதுவே யானென்று வேதாந்த முணர்ந்தோரால் என்று முபாசிக்கப்படுந் தத்துவமாகிய அத்தன்மைய வுமக்கு நமஸ்காரம். (ருசு)

अहं विश्वकस्तैजसः प्राज्ञरूपो विराट्सूत्रमायेशरूपान्न भिन्नः ।
उपाधौ विभिन्नेऽपि किंत्वस्मि सोऽहं यमेव भजन्वेद तस्मै नमस्ते ॥ ६० ॥

விசுவதைஜஸ பிராஞ்ஞ வடிவமான யான் விராட் சூத்திரமாயேச வடிவத்தின் வேறல்லன். உபாதி பிரிந்தவிடத்தும் அது யானாயிருக்கின்றேன் என்றிவ்வாறு எதனைப் பஜித்து அறிகின்றார்களோ, அத்தன்மைய வுமக்கு நஸ்மகாரம். (சுய)

समस्तानि कर्माणि संत्यज्य विद्वांस्तदेवाहमस्मीत्युपास्ते ह्यजस्रम् ।
यदेवाह सर्वागमान्तैकवेद्यं नमस्तेऽनिशं चिन्तनीयाय तस्मै ॥ ६१ ॥

சகல கர்மங்களையும் செவ்வையாய் விட்டு வித்துவான் அதுவே யானென்று எதனை இடைவிடாது உபாசிக்கின்றாரோ, எதனை எல்லாவாகமங்களின் முடிவொன்றினானே யறியக்கூடியதெனக் கூறுவரோ, அந்த இடைவிடாது சிந்திக்கத் தக்கதாகிய உமக்கு நமஸ்காரம். (சுக)

न कृत्याकृतेः प्रत्यवायः कचित्स्यादभावात्कथं भाव उत्पत्स्यतेऽतः ।
अहं प्रत्यवायीति कृत्याकृते स्यामयं यस्य मोहान्नमस्तेऽस्तु तस्मै ॥६२॥

செய்யத்தக்கதைச் செய்யாததினால் பிரத்தியவாயம் ஓரிடத்துமில்லை. அபாவத்தினின்றும் பாவம் எங்ஙனமுண்டாகும்? ஆதலால் செய்யத்தக்கதைச் செய்யாதபோது யான் பிரத்தியவாயி என்னும் இஃதெதனை யறியாத மோகத்தாலுண்டாகின்றதோ அத்தன்மைய வுமக்கு நமஸ்காரம். (சுஉ)

अधर्मोऽयमेवायमेवात्र धर्मो भवेदित्ययं मोह एवाखिलानाम् ।
यदज्ञानिनां प्रत्यवायप्रदं स्यात्कचिन्न ह्यभावो नमस्तेऽस्तु तस्मै ॥ ६३ ॥

அதர்மம் இதுவே ஈண்டு இதுவே தர்மமாகின்றன தென்னும் இம்மோகமே எதனை யறியாதவர்களாகிய அஞ்ஞானிகள் எல்லோ

ருக்கும் பிரத்தியவாயத்தைத் தருவதாகின்றதோ, ஓரிடத்தும் அபாவமன்றோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (௬௩)

अधर्मं च हृत्स्थं विहाय प्रशान्ता भजन्त्यत्र नूनं स्वरूपं यदीयम् ।
स्वरूपं विचार्या मृतेरा सुषुप्तेर्नमस्तेऽस्तु तस्मै विमुक्तिप्रदाय ॥ ६४ ॥

இதயத்தின் கண்ணுள்ள அதர்மத்தை விட்டு மிக்க சாந்தமுடையோர் சொரூபத்தை விசாரித்து ஈண்டு நிச்சயமாக எதன் சொரூபத்தை மரண பரியந்தமும் சுழுப்தி பரியந்தமும் பஜிக்கின்றார்களோ, அத்தன்மைய விசேஷமுக்தியைத் தருபவரான உமக்கு நமஸ்காரம். (௬௪)

न वै बद्धता मुक्तता वा कदाचित्क्वचिन्नित्यमुक्तस्य किं चात्मनोऽतः ।
बहिश्चेतसोऽन्तश्च गत्यागती ते नमश्चित्तविक्षेपहर्त्रेऽस्तु तस्मै ॥ ६५ ॥

நித்திய முக்தனாகிய ஆக்மாவிற்குப் பெத்தத்தன்மை முக்தத் தன்மைகள் ஓரிடத்தும் ஒரு காலத்தும் இல்லை. வெளியிலும் உள்ளிலும் போக்கும் வரத்தும் சித்தத்திற்காம் ஆதலால் அத்தன்மைய சித்த விக்ஷேபத்தைக் கெடுப்பவரான உமக்கு நமஸ்காரம். (௬௫)

यथा क्षीणचित्तस्तथैवात्मनिष्ठः पुमान्नित्यमुक्तो भवेदद्वितीयः ।
यथा चेतसोऽक्षीणताऽयत्प्रसादात्तथा त्वत्प्रसादाय तस्मै नमस्ते ॥ ६६ ॥

எங்ஙனம் க்ஷீண சித்தமுடையவனோ அங்ஙனமே ஆதமநிஷ்டனாகிய புருடன் நித்தியமுக்தனாய் அத்துவிதீயனாகின்றான். எங்ஙனம் எதன் பிரசாதத்தால் சித்தத்திற்கு க்ஷீணத்தன்மையுண்டாகிறதோ, அங்ஙனமே அதன் பிரசாதத்தின் பொருட்டு அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (௬௬)

प्रसन्ने त्वयि प्राणिनां किन्न लभ्यं परस्त्वत्प्रसादान्न लाभोऽस्ति कश्चित् ।
बुधोऽतोऽनिशं यत्प्रसादाभिकाङ्क्षी नमस्ते प्रपन्नप्रसन्नाय तस्मै ॥ ६७ ॥

நீர் பிரசன்னராகிய போது பிராணிகளுக்கு யாது பெறுதற்குரியதாகாது? தம்முடைய பிரசாதத்தினும் மேலான இலாபமொன்றுமில்லை. அதனால் விவேகி தினமும் எதன் பிரசாதத்தை

விரும்பியவ னுயிருக்கின்றானோ, அந்தத் தம்மைச்சரணடைந்தவரி டத்துப் பிரசன்னராகுபவராகிய உமக்கு நமஸ்காரம். (கூஎ)

पृथिव्यादियुक्ताऽपरब्रह्मनिष्ठा न मुख्या भवन्त्यत्र जन्मास्ति तेषाम् ।
निरस्ताखिलोपाधिनिष्ठो हि मुख्यो न यस्येह जन्मास्ति तस्मै नमस्ते ॥६८॥

பிருதிவி முதலியவற்றோடு கூடிய அபரப் பிரமநிஷ்டையுடை யோர் முக்கியராகார். ஈண்டு அவர்களுக்கு ஜன்ம முண்டு. சகல உபாதிகளும் நீங்கிய நிஷ்டையுடையவனே முக்கியனுவன். எவ னுக்கு ஈண்டுப் பிறப்பில்லையோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம்.

न मुख्यं सुषुप्तेरधिष्ठानतोऽन्यत्सुषुप्तेरधिष्ठानमात्रं हि मुख्यम् ।
यदज्ञानतो दृप्तबालाकिरेतन्नृपाद्वेद चैवं नमस्तेऽस्तु तस्मै ॥ ६९ ॥

சுழுத்தியின் அதிஷ்டானத்திற்கு அந்நியமானது முக்கிய மன்று. சுழுத்தியின் அதிஷ்டான மாத்திரமே முக்கியமாம். எதன் அஞ்ஞானத்தால் கர்வமடைந்த பாலாகி யென்னும் பிராமணர் இதனை யரசனிடத்தினின்றும் இவ்வாறறிந்தாரோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (கூகூ)

विरिञ्च्यादिलोकादिहावृत्तिरस्ति क्वचिच्चात्मलोकादनावृत्तिरस्मात् ।
ध्रुवो ह्यात्मलोकोऽध्रुवानात्मलोकात्परो योऽस्ति चैको नमस्तेऽस्तु तस्मै ॥७०॥

பிரஹ்மா முதலியோரது உலகங்களினின்றும் ஈண்டுத் திரு ம்பி வருகை யுண்டு, இவ்வான்மலோகத்தினின்று திரும்பிவருதல் ஓரிடத்து மின்று. சாசுவதமாயுள்ளது ஆத்மலோகமே. அசாசுவத மான அனான்மலோகத்தின் மேலான ஏகம் எதுவோ, அத்தன் மைய வுமக்கு நமஸ்காரம். (எ0)

परं वेद सन्मात्रमुद्दालकेन स्वपित्रोपदिष्टो यदा श्वेतकेतुः ।
यमात्मानमात्मस्थमव्यक्तमेकं नमस्तेऽनिशं सत्स्वरूपाय तस्मै ॥ ७१ ॥

சுவேதகேது தனது பிதாவாகிய உத்தாலகரால் உபதேசிக் கப்பட்டவராய் தன்னிடத் திருப்பதும் அவ்வியக்தமும் ஏகமுமா கிய எந்த ஆன்மாவை மேலான சன்மாத்திரமாய் அறிந்தாரோ, அந்த என்றும் சற்சொரூபமாயுள்ள உமக்கு நமஸ்காரம். (எக)

भृगुर्वेद पित्रोपदिष्टोऽन्तरेव प्रहृष्टः परब्रह्मरूपात्मलोकम् ।
अनन्ताद्वयानन्दविज्ञानसत्यं यमेकं विशुद्धाय तस्मै नमस्ते ॥ ७२ ॥

பிருகுவானவர் பிதாவினால் உபதேசிக்கப்பட்டவராய், உள்ளத்திலேயே இன்பம் பெற்றவராய், எந்த அநந்தமும் அத்துவயமும் ஆனந்தமும் விஞ்ஞானமும் சத்தியமும் ஏகமுமாகிய பரப்பிரம வடிவ ஆத்மலோகத்தை அறிந்தனரோ, அந்த விசுத்தமாகிய உமக்கு நமஸ்காரம். (௭௨)

विहायैव कोशात्परं पञ्च वेद स्वरूपं यदानन्दकोशस्य पुच्छम् ।
मुमुक्षुः सुषुप्तेरधिष्ठानमेकं सदात्मस्वरूपाय तस्मै नमस्ते ॥ ७३ ॥

பஞ்சகோசங்களைவிட்டு அக்கோசங்களுக்கப்பாற் பட்டதும், ஆநந்தகோசத்தின் புச்ச (ஆதார)மும், சுழுத்திக்கு அதிஷ்டானமும், ஏகமுமாகிய எந்தச் சொரூபத்தை முமுட்சு அறிகின்றனோ, அந்த சதாத்ம சொரூபமாகிய உமக்கு நமஸ்காரம். (௭௩)

अनन्तानि शास्त्राण्यधीत्यापि विद्वान्न दुःखतरो नारदोऽनात्मवित्त्वात् ।
ऋषिर्मानसाद्वेद यं शोकहत्यै नमस्ते सुखौघाय तस्मै विभूम्ने ॥ ७४ ॥

வித்வானாகிய நாரதாரிஷியானவர் அநேக சாஸ்திரங்களை ஓதியும், அநாத்ம ஞானமுடைமையால் துக்கத்திற்கு அந்நியமானவரா(சுகியா)கவில்லை. இருடியானவர் மானஸரான சநத்குமாரரால் எதனை அறிந்தனரோ, அந்தச் சோகத்தைக் கெடுப்பதும் சுகக்கூட்டமும் விபுவுமாகிய உமக்கு நமஸ்காரம். (௭௪)

ऋषेर्याज्ञवल्क्याद्विदेहो महात्मा यदेवाभयं ब्रह्म सम्यग्विदित्वा ।
स्वमेवाभयं तद्बभूद्वेदवेद्यं समस्ताभयाप्याय तस्मै नमस्ते ॥ ७५ ॥

விதேக (ஜனக)ராகிய மகாத்மா யாஞ்ஞுவல்கிய இரிஷியினால் எந்த அபயமாகிய பிரஹ்மத்தைச் செவ்வையாயறிந்து வேதங்களாலறியப்படும் அந்த அபயம் தானாகவே ஆயினரோ, அந்த சகல அபயப் பெருக்கமாகிய உமக்கு நமஸ்காரம். (௭௫)

विदित्वात्र भूमानमेनाश्छिदेऽस्ति प्रवाच्यं किमु प्राणवित्पापनाशे ।
अतः प्राणविद्यामनादृत्य विद्वानुपास्ते यमीशं नमस्तेऽस्तु तस्मै ॥ ७६ ॥

பிராணவித்தையுடையோனது பாவம் நசிக்குமெனின், ஈண்டுப் பூமாவையறிவதினால் பாவம் நசிக்குமென்பதிற் சொல்லவேண்டியது யாதுளது. ஆதலால் பிராணவித்தையை அநாதரித்து வித்துவான் எந்த ஈசனை உபாசிக்கின்றானோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (௭௬)

**अजस्रान्नदानं परित्यज्य जानश्रुतिर्हैक्यमभ्यागमद्धंसवाक्यात् ।**
**स वै प्राणविज्ञान उत्कर्षवांस्तत्परोऽस्माद्य आत्मा नमस्तेऽस्तु तस्मै ॥ ७७ ॥**

இடைவிடா அன்ன தானத்தை விட்டு ஜானசுருதி என்பவர் ஹம்ஸவாக்கியத்தினால் ஐக்கியத்தை யடைந்தார். அவரே பிராணனையறிந்தவர். பிராணனிலும் மேன்மையுடையவர் இதனால் எந்த ஆன்மா அதனின்மேலானதாயிருக்கின்றதோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (௭௭)

**रवीन्द्वग्नितेजो जगद्भासकं चेन्न तस्यापि चित्सन्निधानेन तत्स्यात् ।**
**न यत्सन्निधानं विना किंचिदस्ति क्वचिद्वस्तु तस्मै नमो ज्योतिषे च ॥ ७८ ॥**

சூரியன் சந்திரன் அக்கினி யென்பவற்றின் தேஜஸானது ஜகத்தை விளக்குவதாமெனின் இல்லை. அதற்கும் அவ்விளக்கம் சித்தின் சந்நிதானத்தினாலுண்டாகின்றது. எதன் சந்நிதான மின்றி எந்த வஸ்துவும் எவ்விடத்துமில்லையோ, அத்தன்மைய ஜோதியாகிய உமக்கு நமஸ்காரம். (௭௮)

**परं ज्योतिषां ज्योतिरात्माख्यमेतद्रवीन्द्वादिबुद्ध्यादिविद्योतकं यत् ।**
**विदित्वैव नूनं नरो ब्राह्मणः स्यादमर्त्यश्च तस्मै नमः स्वात्मने ते ॥ ७९ ॥**

எவ்வான்மாவாகிய இது மேலான ஜோதிகளுக்கெல்லாம் ஜோதியாயும், சூரியன் சந்திரன் முதலியவற்றையும் புத்தி முதலியவற்றையும் விளக்குவதாயுமிருக்கின்றதோ, எதனை யறிவதினாலேயே நரன் நிச்சயமாகப் பிராஹ்மணனும் மரணதர்ம மில்லாதவனுமாகின்றானோ, அத்தன்மைய சுவாத்மாவாகிய உமக்கு நமஸ்காரம். ()

**यथाश्वत्थवृक्षे स्वदेहे च तुल्यं स्वमेवाब्रवीद्वासुदेवोऽर्जुनाय ।**
**तथा यस्य साम्यं विजानाति विद्वान्नमस्ते समस्तात्मरूपाय तस्मै ॥ ८० ॥**

எங்ஙனம் பகவான் வாசுதேவர் தமது தேகத்திலும் அரச விருக்ஷத்திலும் தன்னையே சமானமாகக் கூறினாரோ, அங்ஙனமே எவருடைய சாம்மியத்தை வித்துவான் அறிகின்றானோ, அத்தன்மைய ஸர்வாத்ம வடிவமான உமக்கு நமஸ்காரம். (௮௦)

द्विजे पुल्कसे हस्तिनि स्वे शरीरे समः सात्त्विके राजसे तामसे च ।
य आत्मा गुणैस्तैरसंस्पृष्ट ईशो नमस्ते सदा निष्कळंकाय तस्मै ॥ ८१ ॥

எந்த ஆத்மாவாகிய ஈசுவரன் துவிஜனிடத்தும் சண்டாளனிடத்தும் யானையினிடத்தும் தனது சரீரத்திலும் சாத்விகத்திலும் இராஜஸத்திலும் தாமசத்திலும் சமமானவராய் அக்குணங்களாற் பற்றப்படாதவராயிருக்கின்றாரோ அத்தன்மைய என்றும் நிஷ்களங்கமாகிய உமக்கு நமஸ்காரம். (௮௧)

यमाश्चर्यवद्वक्ति कश्चिच्छृणोति प्रशान्तस्तु जानाति न ह्यप्रशान्तः ।
विदित्वाऽपि साक्षात्करोत्यत्र नान्याश्चिदस्मीति दीक्ष्याय तस्मै नमस्ते ॥८२॥

எதனை ஒருவன் ஆச்சரியம்போற் சொல்லுகின்றானோ, கேட்கின்றானோ, மிக்க சாந்தியுள்ளோன் அறிகின்றானோ, சாந்தியில்லாதவன் அறிகிறதில்லையோ, அறிந்தும், ஈண்டு அந்நியயனல்லன், சித்தாயிருக்கின்றேனென்று சாக்ஷாத்கரிக்கின்றானோ, அத்தன்மைய உபதேசிக்கப்படும் பொருளாகிய உமக்கு நமஸ்காரம். (௮௨)

पती देवदैत्यौघयोः पद्मजाद्यं चतुर्वारमाकर्णयन्तौ तथाऽपि ।
न जानाति कश्चित्तयोर्वेद चान्यो ह्यतो दुर्वितर्क्याय तस्मै नमस्ते ॥ ८३ ॥

தேவதைத்தியக்கூட்டங்களுக்குப் பதிகளிருவரும் (இந்திரனும் விரோசனனும்) பிரஹ்மாவினிடத்தினின்று எதனை நான்கு முறை கேட்டனரோ, அங்ஙனமாயினும் அவர்களுள் ஒருவன் (விரோசனன்) அறியவில்லையோ, மற்றவன் (இந்திரன்) அறிந்தானோ, ஆதலால் அந்தத் தர்க்கித்தற்கரிய வுமக்கு நமஸ்காரம். ()

शरीरेन्द्रियप्राणविज्ञानशून्येष्विहैकैकमात्मेति दृप्ता वदन्ति ।
तथा बुद्धिसम्यग्विचारासमर्था यदज्ञानमोहा हि तस्मै नमस्ते ॥ ८४ ॥

எதன் அஞ்ஞானத்தினால் மோகமுடையவர்களும், அப்படியே நல்ல விசாரத்தில் புத்திசாமர்த்திய மில்லாதவர்களுமான கர்வமுடையோர் சரீரம் இந்திரியம் பிராணன் விஞ்ஞானம் சூநியம் என்பவற்றில் ஒவ்வொன்றனை ஆத்மா என்று கூறுகின்றனரோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (அச)

अनेकत्वकर्तृत्वभोक्तृत्वधर्मः स आत्मा विभुश्चिद्गुणश्चेति केचित् ।
न कर्तैव भोक्ता कचिच्चेति चान्ये यदज्ञा वदन्तीह तस्मै नमस्ते ॥ ८५ ॥

அவ்வாத்மா கர்த்திருத் தன்மை போக்திருத்தன்மை அநேகத்தன்மைத் தர்மங்களுடையதும் விபுவும் சிற்குணமுடையதுமாமென்று சிலரும், இது கர்த்தா வன்று சிலவிடத்துப் போக்தாவாமென்று பிறரும் எதனை யறியாதவர்களாய் ஈண்டுக் கூறுகின்றனரோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (அரு)

अनेकात्मना प्रेरकोऽन्यो न हीशोऽस्त्विवति प्राहुरेके नचास्तीति चान्ये ।
विवादास्पदं नैव माया विना यन्नमस्तेऽस्तु तस्मै विवादात्पराय ॥ ८६ ॥

அநேக வடிவமாகப் பிரேரிப்பவன் ஈசனேயாகுக பிறனன்று என்று கூறுவர் சிலர். ஈசனில்லையென்று கூறுவர் பிறர். எவரையின்றி மாயை விவாதத்திற்கு விஷயமாகாதோ, அத்தன்மைய விவாதத்திற்கு மேலானவராகிய உமக்கு நமஸ்காரம். (அசு)

विवादो निवर्तेत यस्य प्रसादात्स्वरूपप्रकाशे जगद्भावनस्य ।
निवृत्ते विवादे पुनर्नैव लोके भ्रमन्त्यद्वितीयाय तस्मै नमस्ते ॥ ८७ ॥

எவருடைய பிரசாதத்தால் ஜகத்தைப் பாவிப்பவனது சொரூபம் பிரகாசிக்குங்கால் விவாதம் நிவிருத்தியாகின்றதோ, விவாத நிவிருத்தியில் உலகத்தில் மீண்டும் பிரமிக்கிறதில்லையோ, அத்தன்மைய அத்துவிதீயராகிய உமக்கு நமஸ்காரம். (அஎ)

विभुं चित्तनिष्ठं यदंगुष्ठमात्रं पुराणं पुमांसं वदन्त्यत्र वेदाः ।
जनानां हृदंगुष्ठमात्रं यतोऽस्मादनंगुष्ठमात्राय तस्मै नमस्ते ॥ ८८ ॥

எதனால் ஜனங்களது இதயத்தில் அங்குஷ்டமாத்திரமாயிருக்கின்றதோ, இதனால் எதனை ஈண்டு வேதங்கள் அங்குஷ்ட மாத்திரமும் விபுவும் சித்தத்தினிருப்பதும் பழைமையானதுமான புருஷனுமாகக் கூறுகின்றனவோ, அத்தன்மைய அங்குஷ்டமாத்திர மல்லாதவராகிய உமக்கு நமஸ்காரம். (அஅ)

भ्रुवोर्मध्यमेवाविमुक्तं मुनीनां महाक्षेत्रमित्यत्र बुद्धेः श्रुतश्च ।
न वा वारणासीपुरं गन्तुमिच्छत्स्वरूपे स्थितो यस्य तस्मै नमस्ते ॥ ८९ ॥

புருவநடுவே முநிகளுக்கீண்டு அவிமுக்தமாகிய மகாக்ஷேத்திரமா மென்னும் புத்தியினாலும் சுருதியினாலும் எதனது சொரூபத்தில் நிலைத்திருப்பவன் வாரணாசி புரத்தையடைய விரும்பானோ அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (அகூ)

शरीरे यथाऽहंमतिः सर्वजंतोस्तथा मुक्तिबुद्धिश्च काशीमृतेर्वा ।
स्वरूपप्रकाशं विना यस्य मुक्तिर्न वै संभवेत्कापि तस्मै नमस्ते ॥ ९० ॥

சகல ஜீவர்களுக்கும் சரீரத்தில் யானெனும் புத்தி யெங்ஙனமோ, அங்ஙனமே யாகும் காசிமரணத்தினால் முக்தி யென்னும் புத்தியும் எவரது சொரூபப்பிரகாச மின்றி முக்தி ஓரிடத்தும் சம்பவியாதோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (கூ0)

स्वरूपप्रकाशप्रकाशैकहेतुर्हि यस्य प्रकृष्टागमान्तार्थसम्यग्विचारः ।
अतो यत्प्रकाशाय वेदान्तनिष्ठोऽनिशं स्याद्विवेकी नमस्तेऽस्तु तस्मै ॥९१॥

மேலான ஆகமாந்தங்களின் அர்த்தத்தினது செவ்வையான விசாரம் எவருடைய சொரூபப்பிரகாசமொன்றற்கே ஏதுவாயிருக்கின்றதோ, இதனால் எதனது பிரகாசத்தின்பொருட்டு விவேகி தினமும் வேதாந்த நிஷ்டனாகின்றானோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (கூக)

वदन्तश्च रुद्रादयोऽप्यात्मतत्त्वं न जानन्त्यतः केऽपि वेदान्तनिष्ठाः ।
तथास्तानिहोत्सृज्य वेदान्तनिष्ठो भवेद्यत्प्रबोधाय तस्मै नमस्ते ॥ ९२ ॥

இதனால் பேசுகின்றவர்களாகிய சில வேதாந்த நிஷ்டர்களும் உருத்திராதியோரும் ஆத்ம தத்துவத்தை யறியார்கள் ஆதலால் அவற்றை இங்கு விட்டு, எதனை யறிதற்பொருட்டு வேதாந்த நிஷ்டராகின்றார்களோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (கூஉ)

सुरेन्द्रो विदित्वैव यस्य स्वरूपं समस्तादघाद्वृत्रहत्यादिरूपात् ।
विमुक्तो हि वेदान्तनिष्ठो मुदाऽऽस्ते निरस्याभिमानं नमस्तेऽस्तु तस्मै॥९३॥

எவருடைய சொரூபத்தை அறிந்ததினாலேயே தேவேந்திரன் விருத்திரனது கொலை முதலிய வடிவினவாகிய சகல பாவங்களினின்றும் விமுக்தனானானோ, வேதாந்த நிஷ்ட அபிமானத்தைவிட்டுக் களிப்பாயிருப்பானோ அத்தன்மைய உமக்கு நமஸ்காரம்.(கூரு)

यदीयं स्वरूपं विचार्यैव तिष्ठन्सदा वन्दनीयोऽमरैरिन्द्रमुख्यैः ।
विशुद्धो ह्ययं देववन्द्यस्त्वतो वै नमस्तेऽस्तु तस्मै विशुद्धिप्रदाय ॥ ९४ ॥

எவருடைய சொரூபத்தை விசாரித்து நின்று, இந்திர முக்கியர்களான தேவர்களாலும் எப்போதும் வணங்கத்தக்கவனாகின்றானோ, தேவர்களால் வந்திக்கப்படுந்தன்மை யாலிவன் விசுத்தனாகின்றானோ, அத்தன்மைய விசுத்தியைத்தரும் உமக்கு நமஸ்காரம்.

स्वयं शुद्ध एवान्यशुद्धिं ददाति क्वचिन्न ह्यशुद्धोऽन्यशुद्धिप्रदः स्यात् ।
स्मृतः शुद्धिदः सर्वजंतोर्य आत्मा विशुद्धः पवित्राय तस्मै नमस्ते ॥९५॥

தான் சுத்தமாயுள்ளதே பிறவற்றிற்குச் சுத்தியைத்தரும். ஓரிடத்தும் சுத்தமில்லாதது பிறவற்றின் சுத்தியைத் தருவதாகாது. எந்த விசுத்தமாகிய ஆத்மா சகல ஜீவர்களுக்கும் ஸ்மரிக்கப்பட்டதாய்ச் சுத்தியைத் தருவதாகின்றதோ, அந்தப் பவித்திரவடிவமாகிய உமக்கு நமஸ்காரம். (கூரு)

सकृत्संस्मृतश्चेत्समस्तं च पापं दहत्यग्निवद्यस्त्विहात्यन्तदीप्तः ।
चिदेवाहमित्येव बुद्धौ प्रवेशस्वदीप्तिर्नमस्तेऽस्तु तस्मै महिम्ने ॥ ९६ ॥

சித்தே யானென்னும் புத்தியிற் பிரவேசிக்கும் எந்தத் பிரகாசம் ஒரு முறை ஸ்மரிக்கப்படுமாயின், அக்கினியைப்போல சண்டு

மிக்க பிரகாசமுடைபதாய்ச் சகலபாவங்களையும் எரிக்கின்றதோ, அத்தன்மைய மகிமையுள்ள உமக்கு நமஸ்காரம். (கூசா)

नहि स्नानदानादिना पापनाशे तु तत्संस्कृतिः क्वापि नश्येत्कदापि ।
विना यत्स्मृतिं स्मृत्युपाय च मुक्त्वा स्मरत्पापहन्त्रे नमस्तेऽस्तु तस्मै ॥९७॥

எதன் ஸ்மிருதியையும் ஸ்மிருதி யுபாயத்தையும் விட்டு, (செய்யப்படும்)ஸ்நான தான முதலியவற்றாற் பாவ நசிக்குமாயினும் அதன் சம்ஸ்காரம் ஓரிடத்தும் ஒரு நாளும் நசிக்காதோ, அத்தன்மைய நினைப்பவர் பாவத்தை யொழிக்கும் உமக்கு நமஸ்காரம். ()

अनात्मन्यहंताभिमानं निरस्य स्वरूपप्रकाशस्ततः सर्वपापम् ।
न संस्कृत्यनात्माश्रयं स्याद्विनष्टं स्मृतेर्यत्प्रकाशे तु तस्मै नमस्ते ॥ ९८ ॥

அநாத்மாவினிடத்து யானென்னு மபிமானத்தை விட்டுச் சொரூபப் பிரகாசமுண்டாக, அதனால் அநாத்மாசிரயமான சகல பாவங்களும் சம்ஸ்காரமு மில்லாதன வாகின்றனவோ, எது பிரகாசிக்க ஸ்மிருதி நஷ்டமாகின்றதோ, அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (கூஅ)

अनाकर्ण्य वेदान्तभाष्यं समग्रं न कस्यापि यत्स्मृत्युपायोऽस्ति कश्चित् ।
अतस्तच्चिकीर्षा स्वतो यस्य जाता नमस्ते दयालुस्वरूपाय तस्मै ॥ ९९ ॥

வேதாந்த பாஷியமுழுவதும் கேளாமல் எதன் ஸ்மிருதி யுபாயம் யாதும் யாருக்கு முண்டாகிறதில்லையோ, அதனால் அதனைச் செய்யுமிச்சை இயல்பாக எவருக்குண்டாயிற்றோ, அத்தன்மைய தயாளு சொரூபரான உமக்கு நமஸ்காரம். (கூகூ)

समस्तागमान्तानिह व्याचिकीर्षुः स्वयं शंकराचार्यरूपावतीर्णः ।
कृतव्याससूत्रादिभाष्यो य आत्मस्वरूपैक्यधीदाय तस्मै नमस्ते ॥१००॥

சகல சாஸ்திர முடிவுகளையும் ஈண்டு விரிக்க விரும்பியவராய்ச் சுவயம் சங்கராசாரிய வடிவமா யவதரித்தவரும் வியாச சூத்திர முதலியவற்றிற்குப் பாஷியஞ்செய்தவரும் எவரோ, அத்தன்மைய ஆத்மசொரூப ஐக்கிய ஞானத்தைத் தருபவரான உமக்கு நமஸ்காரம். (க00)

चतुर्भिः प्रशान्तैः स्वशिष्यैर्युतः सन् भुवं पर्यटन्नात्मनिष्ठाऽखिलात्मा ।
स्वभाष्यप्रचारं सदा कारयन्यो विभात्यद्वितीयाय तस्मै नमस्ते ॥ १०१ ॥

ஆத்ம நிஷ்டராகிய அகிலாத்மாவாய் நான்கு சாந்தமுள்ள சிஷ்யர்களுடன் கூடியவராய்ப் பூமியிற் சஞ்சரித்து, தனது பாஷியப் பிரசாரத்தை எப்போதும் செய்கின்றவராய், எவர் விளங்குகின்றாரோ, அத்தன்மைய அத்துவிதீயராகிய உமக்கு நமஸ்காரம். ()

विराट्सूत्रमायेशतुर्यस्वरूपैः क्रमात्तोटकाचार्यनामादिसंज्ञैः ।
चतुर्व्यूहवेषैः स्वशिष्यैर्युतायाद्वयायात्मने ते नमो निर्गुणाय ॥ १०२ ॥

முறையே விராட்டு சூத்திராத்மா ஈசுவரன் துரியமென்னும் சொரூபமுடையோராய்த் தோடகாசாரியர் முதலிய பெயருடையோராய் நான்கு வியூகவேஷமுடையோராயுள்ள தனது சிஷ்யர்களோடு கூடிய அத்துவயமும் நிர்குணமும் ஆத்மாவுமாகிய உமக்கு நமஸ்காரம். (க0உ)

अजं कर्मठं विश्वरूपं विदित्वा तुरीयाश्रमं चाथ तस्मै प्रदाय ।
व्यधादृश्यशृंगाश्रमे शारदार्चापरं तत्त्वरक्षाय तस्मै नमस्ते ॥ १०३ ॥

பிரஹ்மாவும் கர்மட(கர்மத்தி லழுத்தமுள்ளவ)ருமாகிய விசுவரூபரையறிந்து, அவருக்கு நான்காவது(சந்நியாச)ஆசிரமத்தைக் கொடுத்து ருசியசிருங்காச்சிரமத்தில் சாரதையின் அருச்சைசெய்யுந்தன்மையுடையவராகச் செய்தனரோ, அத்தன்மைய தத்துவத்தை ரக்ஷிப்பவராகிய உமக்கு நமஸ்காரம். (க0௩)

य आचार्यभाष्याण्यधीत्यैव भक्त्या लभन्ते निजानन्दमात्मस्वरूपम् ।
गुरुस्तैरयं वन्द्य आत्मात्मविद्भिस्ततः सर्ववन्द्याय तस्मै नमस्ते ॥ १०४ ॥

எவர்கள் ஆசிரியரது பாஷியங்களைப் பக்தியோடு படித்து நிஜாநந்தமாகிய ஆத்ம சொரூபத்தை யறிகின்றார்களோ, அப்படிப்பட்ட ஆத்ம ஞானிகளால் இவ்வாத்மாவகிய எந்தக் குருவானவர் நமஸ்கரிக்கப்படுகின்றனரோ, அந்த எல்லாராலும் வணங்கப்படும் உமக்கு நமஸ்காரம். (க0௪)

नमः शंकराचार्य तुभ्यं पुरस्तान्नमः पृष्ठतः पार्श्वतश्चाथ ऊर्ध्वम् ।
नमः सर्वतः सर्वरूपाय तस्मै विशुद्धात्मने ब्रह्मणे ते नमस्ते ॥ १०५ ॥

சங்கராசாரி சுவாமிகளே! தமக்கு முன்னுகவும் நமஸ்காரம் பின்னுகவும் நமஸ்காரம் பக்கங்களிலும் கீழும் மேலும் எங்குமாக நமஸ்காரம். சர்வசொரூபமாயும் விசுத்தமாயும் பிரஹ்மமாயுமுள்ள அத்தன்மைய உமக்கு நமஸ்காரம். (கO௫)

अहं देहबुद्ध्या तवैवास्मि दासो ह्यहं जीवबुद्ध्याऽस्मि तेंशैकदेशः ।
त्वमेवास्म्यहं त्वात्मबुद्ध्या तथापि प्रसीदान्वहं देहबुद्ध्या नमस्ते ॥ १०६ ॥

யான் தேகபுத்தியினுல் தமது தாஸனுயிருக்கின்றேன். ஜீவபுத்தியால் தமது அம்சத்தின் ஏகதேசனுயிருக்கின்றேன். ஆத்மபுத்தியினுல் நீரே யான். அங்ஙனமாயினும், தேகபுத்தியினுல் தினந்தோறும் யான் உம்மை நமஸ்கரிக்கின்றேன். சந்தோஷிப்பீராக. (கO௬)

स भाष्यार्थ आशु स्फुरत्वन्तकाले चिताभासचैतन्यहृक्त्वत्प्रसादात् ।
गतिर्नान्यथा मे समस्तापराधं क्षमस्वाखिलात्मन्नमस्तेऽस्तु नित्यम् ॥१०७॥

தமது பிரசாதத்தினுல் சிதாபாஸ சைதன்னிய திருக்காகிய அந்தப் பாஷியார்த்தம் கடைசிக்காலத்தில் சீக்கிரம் ஸ்புரிக்குக. எனக்கு வேறுவித கதியில்லே. சர்வாத்மாவாகிய தாம் சகல அபராதங்களேயும் பொறுத்தருளல் வேண்டும். நித்தியம் உமக்கு நமஸ்காரம். (கO௭)

नमो भाष्यबृन्दाय भाष्योपदेष्ट्रे नमो भाष्यकृद्भ्यो नमो भाष्यविद्भ्यः ।
नमो भाष्यबृन्दार्थभूताय भूम्ने विशुद्धात्मने ब्रह्मणेऽस्मै परस्मै ॥ १०८ ॥

பாஷியக்கூட்டத்திற்கு நமஸ்காரம். பாஷிய வுபதேசகர்த்தாவிற்கு நமஸ்காரம். பாஷியம் செய்தவர்களுக்கு நமஸ்காரம். பாஷியமுணர்ந்தவர்களுக்கு நமஸ்காரம். பாஷியக்கூட்டப் பொருள் வடிவரும் வியாபகரும் விசுத்தாத்மாவும் பிரஹ்மமுமாகிய இந்தப் பரத்திற்கு நமஸ்காரம். (கO௮)

यतोऽष्टोत्तराष्टकश्लोकमेतद्भुजंगप्रयातं पठेद्योऽत्र भक्त्या त्वदीयम् ।
चिदाभासचिद्रूपमेकं पदाब्जं स्मरन्स्वस्वरूपेण नूनं रमेत ॥ १०९ ॥

எவன் இந்த நூற்றெட்டுச் சுலோகமான புஜங்க பிரயாதத்தைப் பக்தியோடு படிக்கின்றானோ, அந்தச் சிதாபாசன் அத்துவிதீயமும் சித்துவடிவமும் ஏகமுமாகிய தமது பாதத்தாமரையினை ஸ்மரித்து நிச்சயமாகத்தனது சொரூபமாக இரமிப்பன். (௧௦௯)

भुजंगप्रयातार्थमत्यंतभक्त्या सकृद्वा स्मरेत्प्रत्यहं श्रीगुरोर्यः ।
निरस्तांधकारः स आनन्दरूपं व्रजत्यच्युतं त्वां त्वदीयप्रसादात् ॥ ११० ॥

ஸ்ரீ குருபுஜங்கப் பிரயாதத்தின் அர்த்தத்தை எவன் தினந்தோறும் ஒரு முறையேனும் அத்தியந்த பக்தியோடு ஸ்மரிக்கின்றானோ, அந்தகாரமொழிந்த அவன் உம்முடைய பிரசாதத்தினால் ஆநந்தவடிவமும் அச்சுதமுமாகிய உம்மை யடைகின்றான். (௧௧௦)

अहं ब्रह्म भूत्वापि नेति भ्रमोऽभूत्तदीयस्वरूपावबोधात्पुरा मे ।
गुरो त्वत्प्रसादाद्विमुक्तोऽहमस्मि चिताभासचिद्रूप आत्मा विशुद्धः ॥१११॥

அவருடைய சொரூபஞான முண்டாவதற்குமுன் யான் பிரஹ்மமாகியும் எனக்கு அங்ஙனமில்லை யென்னும் மயக்கமுண்டாயிருந்தது. ஆசிரியரே! தம்முடைய பிரசாதத்தினால் சிதாபாசனாகிய யான் விமுக்தனாய் சித்து வடிவ விசுத்த ஆத்மாவாயிருக்கின்றேன்.

अतो बुद्धिमांस्त्वत्प्रसादाय नित्यं भुजंगप्रयातं पठेद्वा तदर्थम् ।
स्मरेद्वा गुरो ते प्रणम्यैव भूयश्चिदाभासचिद्रूपमेकं परं तत् ॥ ११२ ॥

ஆதலால் புத்திமான் தமது பிரசாதத்தின்பொருட்டு நித்தியம் புஜங்கப் பிரயாதத்தைப் படிக்குக அல்லது அதன் அர்த்தத்தை ஸ்மரிக்குக. ஆசிரியரே! தம்மை அடிக்கடி நமஸ்கரித்தே சிதாபாஸன் சித்துவடிவமும் ஏகமுமான அந்தப் பரமாவன். (௧௧௨)

मुनीन्द्रैः पुराणैरनुध्येयमीशं विरिञ्चादिभिः सर्वदेवैश्च वन्द्यम् ।
कथं त्वामहं स्तोतुमिच्छन्भवंतं क्व वा साधये नेह किं किं महेशे ॥११३॥

பழமையான முநீந்திரர்களால் அநுசந்திக்கத்தக்கவரும், பிரஹ்மா முதலிய சகல தேவர்களால் வந்திக்கத்தக்கவருமான

ஈசனாகிய உம்மை யான் எவ்வாறு ஸ்தோத்திரஞ் செய்யவிரும்பிய வனாய்த் தம்மை எங்கு சாதிப்பேன்? ஈண்டு யானுமில்லை. மகேச னிடத்து யாதுள்து. (கக௩)

कृपा ते कृपाळो विमुग्धं विशुद्धं करोतीह मूकं च वाचालमीशम् ।
अतस्त्वत्कृपावैभवेनैवमेतत्कृतं मे चिकीर्षाखिलात्मन्नमस्ते ॥ ११४ ॥

கிருபையுடையவரே தமது கிருபை விசேஷமோகமுள்ள வனை விசேஷ சுத்தனாக்குகின்றது. ஊமையை வாக்குச்சாமர்த்திய முள்ள ஈசனாக்குகின்றது. ஆதலால் தமது கிருபையினால் எனது செய்யவேண்டுமென்னும் இச்சையானது இவ்வாறு இதனைச்செய் தது. சர்வாத்மாவே! உமக்கு நமஸ்காரம். (கக௪)

சத்திய ஞானாநந்தச் சங்கர னடிகள் வாழ்க
சத்திய பிரஹ்மாநந்தன் ருமௌன துளமே யாக
சத்திய முரைக்கு மிந்நூற் றரணியி லென்றும் வாழ்க
பத்தியாய் படிப்போர் கேட்போர் பயனுடன் வாழ்க வாழ்க.

ஓம் தத்ஸத்குருபரப்பிரம்ஹணே நம:

---

श्री गुरुभुजंगस्तोत्रम्

ஸ்ரீ குருபுஜங்க ஸ்தோத்திரம்

संपूर्णम्.

முடிந்தது.